<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

<u>அ.வ எண்: 113/2018 பேச்சிமுத்து (பிசா1) தேதி: 21.04.2026.</u>

<u>பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கூலி அரவை ரைஸ்மில் கழுகுமலை – சங்கரக்கோவில் சாலையில் மேற்கே அமைந்துள்ளது. அந்த கூலி அரவை ரைஸ்மில் தற்போது இயங்கவில்லை என்றால் சரிதான். அந்த கூலி அரவை ரைஸ்மில் கடந்த 20 வருடங்களாக இயங்காமல் இருந்து வருகிறது. அந்த கூலி அரவை ரைஸ்மிலின் வாசலில் வடக்கு பக்கம் ஒரு கடையும், தெற்கு பக்கம் ஒரு கடையும் உள்ளது என்றால் சரிதான். எனது அண்ணன் உயிரோடு இருக்கும் போது அதில் ஒரு கடையை நடத்தி வந்தார் என்றாலும், எனது அண்ணன் மறைவுக்கு பிறது அவரது வாரிசுகள் தற்போது நடத்தி வருகிறார்கள் என்றால் எண் அண்ணன் உயிரோடு இருக்கும் வரை அந்த கடையை அனுபவம் செய்து கொள்ள மட்டுமே உரிமை வழங்கப்பட்டது. எண் அண்ணன் மறைவுக்கு பிறகு அந்த கடையை வேறு நபர்கள் வடகைக்கு இருந்து வருகிறார்கள். அந்த கடையின் வாடகையை எனது அண்ணனின் மகன்கள் தாக் வாங்கி வருகிறார்கள் என்றால் இந்த வழக்கு நடந்து வருவதால் பிரச்சனை எதுவும் செய்யக்கூடாது என இருந்து வருகிறேன். அந்த கூலி அரவை ரைஸ்மில் இயங்கி வந்த போது அதன் உள்ளே இருந்த அனைத்து அரவை மிசின்களும் இயங்காமல் தற்போதும் அதே மில்லில் இருந்து வருகிறது. மின் இணைப்பு கூட பெயர் மாற்றம் எதுவும் செய்யாமல் அப்படியே இருந்து வருகிறது. அந்த மிண் இணைப்பு

எனது அப்பா மாரியப்ப நாடார் பெயரில் இருந்து வருகிறது என்றால் இல்லை. அந்த மில்லின் பழைய உரிமையாளர் கணபதியாபிள்ளை பெயரில் தான் மிண் இணைப்பு இருந்து வருகிறது. அந்த கூலி அரவை ரைஸ்மில் உரிமம் எனது தந்தை பெயரில் முதலில் எடுக்கப்பட்டது. அதன் பின்னர் மில் ஒடாததால் புதுப்பிக்கப்படவில்லை. 1வது தபசில் சொத்தில் மொத்தம் 3 வீடுகள் உள்ளது. அதில் ஒரு வீட்டில் எனது அண்ணன் புஸ்பராஜ் 30 வருடங்களாக வசித்து வந்தார். தற்போது அந்த வீட்டில் எனது அண்ணனின் மனைவி மட்டும் வசித்து வருகிறார். திருமாளிகை தெருவில் உள்ள 3 வீடுகளில் ஒரு கதவு எண். 13 கொண்ட வீட்டில் தான் எனது அண்ணன் வசித்து வந்தார். அந்த வீடு இன்றளவும் எனது தற்தை மாரியப்ப நாடார் பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு மிண் இணைப்பு வரிவிதிப்பு என் அண்ணன் புஸ்பராஜ் பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது தந்தை 1991 ம் வருடம் நவம்பர் மாதம் 2ம் தேதி இறந்துவிட்டார். அதன்பின்னர் எனது தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாய் தந்தை இறந்த பின்னர் சொத்துக்களை பொருத்து நாங்கள் எந்த பாகப்பத்திரமும் எழுதிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.3 ஆவணத்தில் எனது அண்ணன் எந்த எந்த சொத்துக்களை பொருத்து அந்த ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்ற விபரம் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணத்தில் சர்வ சங்கம சொத்துக்களை பொருத்து எழுதிக்கொடுக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்ட பின்பும் எனது அண்ணன் புஸ்பராஜ் மேற்படி ரைஸ்மில்லில் கடலைமிட்டாய் வியாபாரம் பார்த்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு ரைஸ்மில்லில் வியாபாரம் பார்த்து

வந்தற்கு அவர் யாரிடமும் வாடகை கொடுக்கவில்லை என்றால் உடன் பிறந்தவர் என்பதால் கொடுக்கவில்லை. அவர் வசித்து வந்த வீட்டிற்கும் வாடகை ஏதுவும் சொலுத்தவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.3 க்கு பின்னர் கோவிலுக்கு பாத்தியப்பட்ட 2 கடைகளை நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் நடத்தி வந்தோம் என்றால் நாங்கள் 4 பேரும் சேர்ந்து தான் அந்த கடைகளை கூட்டாக நடத்தி வந்தோம். அந்த கடைகளை கோவில் நிர்வாகம் காலி செய்ய முயற்சி செய்ததால் என் அண்ணன் உட்பட நாங்கள் 5 பேரும் சேர்ந்து கோவில்பட்டி மாவட்ட உரிமை நீதிமன்றத்தில் கோவில் நிர்வாகத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தோம் என்றாலும் அதில் எண் அண்ணன் புஸ்பராஜ் 1ம் வாதி என்றாலும் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பானை சான்றிட்ட நகல் என்றாலும், அது வா.சா.ஆ.7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். பி.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சி கையெப்பம் செய்த நபர்கள் துரைச்சாமி நாடார், இன்னாசி ஆவார்கள். அந்த ஆவணத்தில் மேற்படி சாட்சிகளை எனது தரப்பு சாட்சிகளாக் விசாரிக்க தயாராக உள்ளோனா என்றால் அவர்களை சாட்சிகளாக விசாரிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. பி.சா.ஆ.3 ஆவணத்திற்கு பின்னர் எனது அண்ணன் புஸ்பராஜ் ரைஸ்மில்லில் வியாபாரம் செய்தும், அந்த வீட்டில் குடியிருந்தும் வந்த நிலையில், 35 வருடங்களாக அது சம்பந்தமாக அவர்களை காலி செய்யும் படி ஏதாவது சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் 2018ம் வருடம் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினோம். அந்த அறிவிப்பு ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதன் பின்னர் அந்த சொத்தில் இருந்து புஸ்பராஜை வெளியேற்ற வழக்கு

ஏதாவது தாக்கல் செய்தேனா என்றால் நாங்கள் நாள்வரும் தனிப்பட்ட முறையில் புஸ்பாரஜிக்கு எதிராக வழக்கு ஏதுவும் தாக்கல் செய்யவில்லை. ரைஸ்மில் முழுவதும் புஸ்பராஜ் அனுபவத்தில் தான் இருந்து வந்தது என்றால் மில் அவரது அனுபவத்தில் இல்லை. மில்லில் வாசலில் இருந்த கடை மட்டுமே 1995ம் வருடம் வரை மட்டுமே அவர் அனுபவத்தில் இருந்தது. அந்த மில்லை மரியத்தங்க ராஜ் என்பவருக்கு குத்தகைக்கு விட்ட விபரம் தெரியுமா என்றால் அவர் அந்த மில்லை குத்தகைக்கு விடவில்லை மாறாக அந்த கடையை மட்டுமே மரியத்தங்கராஜ் என்பவருக்கு மேல் வாடகைக்கு விட்டார். எண் அண்ணன் இறக்கும் வரை அந்த கடை வாடகையை அவர் தான் வாங்கி வந்தார் என்றால் சரிதான். அதன் பின்னர் அவரது மகன்கள் அந்த வாடகையை வாங்கி வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. பி.சா.ஆ.3 எழுதிக்கொடுத்த பின்னர் கூட்டு குடும்ப சொத்தில் அவரும் ஒரு உறுப்பினராக இருந்து சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து லந்ததால் பி.சா.ஆ.3 செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. பிசா.ஆ.3 ஆவணம் பெயரளவில் தான் உள்ளது என்றாலும், நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் பி.சா.ஆ.3 அடிப்படையில் புஸ்பராஜ் மீத நாங்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆனால் என் அண்ணனிடம் பிசா.ஆ.3 அடிப்படையில் வாய்மொழியாக கேட்டேன். இந்த வழக்கில் எங்கள் தரப்பில் எதிர்கோரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இன்றுவரை புஸ்பராஜ் குடும்பம் மாரியப்ப நாடார் சொத்துக்களை கூட்டு குடும்ப சொத்துக்ளாகத்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், அவர்கள் தொடர்ந்து ஆட்சேபனை எதுவும் இல்லாமல் பி.சா.ஆ.3க்கு பின்பு 30 வருடங்களுக்கு

மேலகாக கூட்டு குடும்பமாக அனுபவம் செய்து வருவதால் பி.சா.ஆ.3 ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் அது செல்லாத ஆவணம் என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.3 க்கு பின்னர் பிரதிவாதிகள் நாங்கள் நால்வரும் பாகம் எதுவும் செய்துகொள்ள வில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.3 நடைமுறைக்கு வராததால் நாங்கள் புஸ்பராஜ் குடும்பத்திற்கு பாகம் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.